# LIFE RESPONSE PART II

அடுத்ததாக நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது.

1. **வாழ்க்கையில் முன்னேற ஒரு வாய்ப்பு நம்மை தேடிவரும்போது அந்த வாய்ப்பை நாம் அவசியம் ஏற்று பயன்படுத்தியே ஆகவேண்டும். அப்படி பயன்படுத்தத் தவறும்போது வந்த வாய்ப்பு விலகிவிடுகிறது. அதோடில்லாமல் வந்ததோடு சேர்ந்து இருந்ததும் போகும் மேலும் ஒரு மோசமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.**

அதாவது வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறினால் உள்ளதும்போகும் என்ற நிலை வந்துவிடுகிறது. இதற்கு நம்நாட்டு அரசியல் தலைவர்களே நல்ல உதாரணம். நேருஜி பிரதமராக இருந்த சமயத்தில் ஐ. நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவிற்கு இடம் கொடுக்க முன்வந்தார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகும். ஆகவே சந்தோஷமான மனோபாவத்துடன் நேருஜி அவர்கள் இந்த வாய்ப்பை ஏற்றிருக்க வேண்டும். ஆனால் அவர் ஒரு வித்தியாசமான முடிவிற்கு வந்தார். அதாவது ஐ. நா பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினராகும் பெருமை சீனாவிற்குத்தான் உரியது, ஆகவே அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுங்கள் என்று பதிலளித்தார். இப்படி சொல்வது பெருந்தன்மையான பதிலாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் இந்தியாவிற்குக் கிடைத்த ஒரு பெரிய வாய்ப்பை நழுவ விட்டதாகத் தெரிகிறது. சீனர்களும் நம்மை தவறாகப் புரிந்து கொண்டார்கள். அதாவது வந்த வாய்ப்பை சீனாவிற்கு விட்டுக்கொடுத்ததை அவர்கள் பெருந்தன்மையாக நினைக்கவில்லை. மாறாக பலஹீனத்திற்கு அறிகுறியாக எடுத்துக் கொண்டார்கள். இதன் நேரடி விளைவாக ராணுவ ரீதியாகவே நம்மை பலஹீனமானவர்கள் என்று நினைத்து விட்டார்கள். ஒரு பக்கம் நேருஜி அவர்கள் சீன தலைநகரான பீஜிங்க்கு சென்று பஞ்ச சீல கொள்கைகளின் சிறப்பைப்பற்றி பேசி ஹிந்தி-சீனி பாயி பாயி என்று நட்புறவை வளர்த்தாலும், சீனர்களோ மறைமுகமாக இந்திய எல்லையை தாக்குவதென்று ராணுவ ரீதியாக தயாராகிவிட்டார்கள். திடீரென்று அவர்கள் தாக்குதல் நடத்தவே இந்திய ராணுவம் அதை சமாளிக்க வழி தெரியாமல் தடுமாறிப்போனது. இந்திய எல்லைக்குள் ஊடுருவிய சீனப்படைகள் பின்பு தானாகவே பின்வாங்கி அவர்களுடைய பழைய எல்லைக்குப் போய்விட்டார்கள். அப்படி ஊடுருவியவர்கள் பின்வாங்க மறுத்திருந்தால், அருணாசலப் பிரதேசத்தில் ஏராளமான இடம் இந்திய நாட்டின் கையை விட்டேப்போயிருக்கும்.

தாக்குதலை நிகழ்த்தியவர்கள் தாமாகவே பழைய எல்லைக்கு திரும்பிப் போய்விட்டாலும், சீனாவின் தாக்குதலை இந்தியாவால் சமாளிக்க முடியவில்லை என்ற விஷயம் வெளிஉலகுக்குத் தெரிந்துப்போனதால் உலக அரங்கில் இந்தியா அவமானத்திற்கு ஆளானது. நேருக்கு அவர்கள் தான் சீனர்களிடம் காட்டிய நட்புறவை ஏற்றுக் கொள்வதாக போலியாக நடித்துப்பின் மறைமுகமாக ஏமாற்று வேலையில் ஈடுபட்டதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இதனால் அவரின் மன உறுதியே தளர்ந்து போனது. இறுதியில் அவர் உடல் நலமே கேட்டு அவர் மரணத்தை தழுவ, அவர் வாழ்நாளே முடிந்தது. ஆக நேருஜி வாழ்க்கையில் நடந்ததிலிருந்து நாம் புரிந்து கொள்வதென்ன? அவரை பொறுத்தவரை நாட்டிற்கு ஒரு பெரிய வாய்ப்பு அவரை தேடி வந்தது. அதை அவர் ஏற்காமல்விட்டபோது வாய்ப்பு தலைகீழாக ஆபத்தாக மாறி எதிரியின் கை வலுவடைந்து நாட்டின் பாதுகாப்பிற்கே ஆபத்தாக வந்து விடிந்தது. இதுபோதாதென்று இதன் விளைவாக அவருடைய மனஉறுதி தளர்ந்து, அதோடு உடல் நிலையும் தளர்ந்து, அவருடைய ஆயுட்காலமே முடிந்து போனது. முன்னேற மறுத்தால், வாழ்க்கையில் சரிவை சந்திக்க நேரிடும் என்பதற்கு நேருஜி வாழ்க்கையில் நிகழ்ந்தது நல்ல எடுத்துக்காட்டாகும். நேருஜி அவர்கள் தேசிய தலைவர். ஆனால், காமராஜர் அவர்கள் தமிழர் தலைவர் என்று சொல்லலாம். அவருடைய வாழ்க்கையிலும் இம்மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. தமிழக காங்கிரசில் முன்னணி தலைவராக விளங்கியவர் நேருஜியால் தேசிய அரசியலுக்கு கொண்டுவரப்பட்டார். நேருஜியின் மறைவுக்குப்பின் அவரேகூட பிரதமராகலாம் என்றொரு பேச்சு வந்தது. ஆனால் அவர் தாழ்த்தப்பட்ட

ஜாதியை சேர்ந்தவர். அதுவும் அவருடைய இளமைகாலத்தில் காங்கிரஸ் கட்சியில் சாதாரண தொண்டனாக செயல்பட்டு விருதுநகர் தெருவில் தண்டோரா போட்டவர். ஆகவே தாழ்த்தப்பட்ட சமூகம், தண்டோரா போட்ட வேலை என்று இவற்றால் விளைந்த தாழ்வு மனப்பான்மையிலிருந்து அவரால் மீள முடியவில்லை. ஆகவே தான் பதவிக்கு வந்தால் அவ்வளவு நன்றாக இருக்காது என்று முடிவு செய்து தனக்குப் பதிலாக சாஸ்திரி அவர்களை பிரதமர் பதவியில் அமர வைத்தார். அதாவது தன்னை தேடிவந்த வாய்ப்பை ஏற்க மறுத்தார் என்றாகிறது. இதோடு அது முடிந்துவிடவில்லை. 66-இல் சாஸ்திரி மறைந்தபோது மீண்டும் பிரதமர் பதவி அவரை நாடிவந்தது. இந்த தடவை நேருஜிமேல் அவர் கொண்ட விசுவாசத்தை வெளிப்படுத்தும் வகையில் நேருஜியின் மகளான இந்திராவை பிரதமராக்கினார். ஆனால் இந்திரா அவர்கள் காமராஜரிடம் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சியை இரண்டாக உடைத்தார். இந்திரா காங்கரசின் கை வலுத்தது. காமராஜ் அவர்கள் நடத்திய ஸ்தாபன காங்கிரசின் கை தாழ்ந்துப்போனது. இதுவே காமராஜர் அவர்களுக்குப் பெரிய வீழ்ச்சி என்றாலும் அவருடைய வீழ்ச்சி மேலும் நீடித்தது. அதாவது தமிழகத்தில் காங்கிரசிற்கு பெரிய போட்டியாக தி. மு. க கிளம்பியது.

போட்டியாக ஒரு திராவிடக் கட்சி தோன்றினாலும் காமராஜர் அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. பொருட்டாக நினைக்காததால், காங்கிரசின் தேர்தல் வாய்ப்புகளை பாதுகாத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. 1962-இல் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் திமுக 50 சீட்டுகள் பெற்றதைக் கண்டபிறகாவது அவர் உஷாராகி இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த கட்டத்திலும் அவர் தன்னை உஷார்படுத்திக் கொள்ளவில்லை. இதற்கிடையே இராஜாஜி அவர்கள் அந்தணர் சமூகத்திற்கு தமிழ்நாட்டில் திமுகவால் ஆபத்து வருவதை உணர்ந்து திமுகவின் கவனத்தை திசை திருப்ப எண்ணி, திமுக தலைமையிடம் அணுகி 1967-ஆம் ஆண்டு வரும் தேர்தலில் திமுகதான் ஆட்சிக்கு வரவேண்டும், சுதந்திரக் கட்சியின் ஆதரவை நான் உங்களுக்கே தருகிறேன், காங்கிரசிற்கு எதிராக ஒரு வியூகம் அமைப்போம். அந்தணர் சமூகத்தை சேர்ந்தவர்களைக்கூட நான் திமுகவிற்கே ஓட்டுப்போடச் சொல்கிறேன் என்றெல்லாம் தி.மு.க தலைமைக்கு நம்பிக்கை வரும்படி பேசினார். காங்கிரசிற்கே பெரிய தூணாக அமைந்த ராஜாஜி அவர்கள் திமுகவின் பக்கம் சாய்ந்துவிட்டார் என்பதை பார்க்கும்போது அதன்பிறகாவது காமராஜர் அவர்களுக்கு எச்சரிக்கை உணர்வு அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் அதையும் அவர் கவனித்தாகத் தெரியவில்லை. திமுகவின் வளர்ச்சியைப்பற்றி பத்திரிக்கைகள் அவரிடம் கேட்டபோது அது ஒரு அசுர சக்தி, அவர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவார்கள் என்று மட்டும் பேசினார். அவர்களே அடித்துக்கொண்டு சாவார்கள் என்று காமராஜர் பேசியபோது, தான் திமுகாவை வீழ்த்த விசேஷ முயற்சி எடுக்கத் தேவையில்லை என்று கூறுவதுபோல் ஆகிவிட்டது. ஆனால் உண்மையில் தமிழக மக்களிடையே திமுக ஆதரவு அலை நன்றாக வீசியது. இதன் விளைவாக தமிழகத்தில் திமுக 137 சீட்டுகளுக்கு மேலாக வெற்றிபெற்று தன்னுடைய சொந்த மெஜாரிட்டியில் ஆட்சியை கைப்பற்றியது. இதன் விளைவாக காங்கிரசிற்கு படுதோல்வி ஏற்பட்டது. எப்படிப்பட்ட தோல்வி என்றால், விருது நகர் சட்டசபை தொகுதியில் ஒரு திமுக மாணவ அணி தலைவர் காமராஜரை வீழ்த்தினார். இது திமுகவிற்கே அதிர்ச்சியை உண்டாக்கியது. என்னதான் திமுக ஆட்சிக்கு வந்திருந்தாலும் காமராஜரை வீழ்த்துமளவிற்கு ஆகியிருக்கக் கூடாது என்று அண்ணாதுரை அவர்களே வருத்தம் தெரிவிக்க வேண்டியதாயிற்று. அப்போது வீழ்ந்த காமராஜர் அவர்கள் பின்னர் எழுந்திருக்கவே இல்லை. தமிழக அரசியலிலும் சரி, தேசிய அரசியலிலும் சரி பெயரும், புகழும் மங்கிய நிலையிலேயே இருந்தார். 1975-இல் இந்திராகாந்தி அம்மையார் emergency-யைக் கொண்டு வந்தபோது இந்திராவிற்கு எதிராக தேர்தல் வியூகம் அமைக்க காங்கிரஸ் எதிர்கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரேகட்சியாக உருவாக முடிவு செய்தபோது காமராஜர் தலைவராக இருந்த ஸ்தாபன காங்கிரசையும், ஜனதா கட்சியுடன் இணைத்து தன் கட்சியின் தனித்தன்மையையே காமராஜர் இழந்தார். இதுபோதாதென்று இந்திரா அவர்கள் காமரஜரை கைது செய்யக் சொல்லி கருணாநிதியை கேட்டுக் கொண்டாராம். நல்லவேளையாக கருணாநிதி அவர்கள் காமராஜரைக் கைது செய்ய மறுத்தார். இதனால் சிறைவாசத்தை காமராஜர் தவிர்த்தார். இருந்தாலும் அவருடைய உடல் நலம் கெட்டு 75-இன் இறுதியிலேயே அவர் மறைந்தார். இங்கே Life Response விதிமுறையின்படி நாம் கவனிக்க வேண்டியது

என்னவென்றால் 64-இல் பிரதமராக வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றார். அது வேண்டாம் என்று மறுத்த பொழுது அவர் வாழ்க்கையில் வந்த மலர்ச்சி அப்படியே சுருங்கி ஒரு சட்டசபை தேர்தலில்கூட ஜெயிக்க முடியாத அளவிற்கு அவருடைய வாழ்க்கை மங்கிப்போய் விட்டது.

இதை அவர் எந்த அளவிற்கு உணர்ந்தார் என்று தெரியவில்லை. அவர் உணர்ந்தாரோ, இல்லையோ ஸ்ரீ கர்மயோகி அவர்கள் இப்படித்தான் காமராஜரின் வாழ்க்கையை புரிந்து கொண்டுள்ளார். வாழ்க்கையில் வரும் வாய்ப்புகளை ஏற்க மறுத்தால் தொடர்ந்து சரிவுகள் வரும் என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவிற்கு வரும் வாய்ப்புகளை தொடர்ந்து ஏற்றால் தொடர்ந்து முன்னேற்றம் வந்துகொண்டே இருக்கும் என்பதும் உண்மை. இதற்கும் நம் நாட்டில் நல்ல உதாரணங்களாக சிலபேர்கள் அமைந்துள்ளார்கள். அவர்களுள் சிறந்த உதாரணமாக நிகழ்பவர் விவசாய விஞ்ஞானி Dr. M. S. சுவாமிநாதன் அவர்கள். கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்தவர் I.P.S. தேர்வு எழுதி போலீஸ் அதிகாரியாகி இருக்க வேண்டியது. ஆனால் வேறுவிதமாக செய்து கோவை விவசாயக் கல்லூரியில் விவசாய இளங்கலைப் பட்டப்படிப்பில் மாணவராகச் சேர்ந்தார். நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு விவசாய கல்விதான் உதவும் என்று அப்பொழுதே அவருக்குத் தெரிந்திருக்கிறது. விவசாய துறையில் டாக்டர் பட்டம் பெற்றார். இவருடைய ஆராய்ச்சி சாதனைகளைப்பற்றிக் கேள்விப்பட்ட மத்திய அரசு Indian Council Of Agriculture and Research (ICAR) என்ற ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் தலைவராக நியமித்தது. இந்த காலக்கட்டத்தில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் நம் நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்களை மனதில் உருவாக்கி வைத்திருந்தார். இதை எல்லாம் யாரிடம் சொல்லுவது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டுமிருந்தார். இவருடைய நண்பர் ஒருவர் கோவை விவசாய பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். தரிசன நாளன்று அவர் புதுவைக்கு வந்திருந்த சமயம் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் அவரிடம் இந்த வளர்ச்சித் திட்டங்களை எல்லாம்பற்றி கலந்துரையாடினார். இதை எல்லாம் கேட்ட அவர் அத்தகைய கருத்துகளை எல்லாம் டாக்டர் சுவாமிநாதன் காதில் போடுங்கள் இவற்றை எல்லாம் செயல்படுத்த அவர்தான் சரியான ஆள் என்று பதிலளித்தார். ஸ்ரீ கர்மயோகி அவர்களும் யாரிந்த டாக்டர் சுவாமிநாதன், எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்று கேட்க நண்பரும் ICAR-ரின் Director General-ஆக புதுடில்லியில் இருக்கிறார் என்று கூறி அவர் முகவரியை எல்லாம் கொடுத்துவிட்டுச் சென்றார். ஸ்ரீ கர்மயோகி அவர்களும் அம்முகவரிக்கு ஒரு கடிதம் எழுதி, தபாலில் அனுப்பிவிட்டு பதிலுக்காக அமைதியாகக் காத்திருந்தார்.

V.I.P-களுக்குக் கடிதம் எழுதினால் பதிலே வராது என்பதுதான் நம் நாட்டு வழக்கம். மாவட்டக் கலெக்டர், மாநில கவர்னர் போன்றவர்களுக்கு சாதாரண குடிமகன் கடிதம் எழுதினால் அதற்குப் பொதுவாக பதிலே வராது. அதுபோய் சேர்ந்ததா? அது அவர்கள் பார்வையில் பட்டதா? அதை அவர்கள் படித்தார்களா? ஏதாவது நடவடிக்கை எடுப்பதாக இருக்கிறார்களா? என்று எதுவுமே கடிதம் எழுதியவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் அதிசயமாக டாக்டர் சுவமிநாதனிடமிருந்து பதில் கடிதமே வந்தது. அக்கடிதத்தில் ஸ்ரீ கர்மயோகி அவர்களின் நாட்டு வளர்ச்சித் திட்டத்தை வரவேற்பதாகவும், அதைப்பற்றிக் கலந்துரையாடுவதற்கு புதுவைக்கே கிளம்பி வருவதாகவும் அவர் பதில் கடிதத்தில் எழுதியிருந்தார். அந்தக் காலகட்டத்தில் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு ஆசிரமவாசி ஒருவர் குருவாக இருந்தார். அந்த குருவிடம் டாக்டர் சுவாமிநாதன் விவசாய வளர்ச்சிபற்றி பேச புதுவைக்கு வருகிறார் என்று தெரிவித்தபோது, குருநாதர் மிகவும் பரவசமடைந்து "டாக்டர் சுவாமிநாதன் வந்தால், நான் அவரை சந்தித்துப் பேசி கொள்கிறேன்" என்று பதிலளித்தாராம். அவர் பதிலளித்த விதத்தைப் பார்த்தால், நீங்கள் அங்கிருக்கத் தேவையில்லை என்று சொல்வதைபோல் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்குப்பட்டதால் அவரும் அமைதியாக எதுவுமே சொல்லாமல் ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாராம். டாக்டர் சுவாமிநாதன் அவர்களும் சொன்னபடி புதுவைக்கு வந்திருந்தார். அவர் வந்திருக்கிறார் என்று ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு செய்தியும் வந்தது. அவரிடம் 2, 3 மணிநேரமாவது பேச வேண்டும் என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் தீர்மானித்திருந்தார். ஆனால் குருநாதரின் குறுக்கீட்டால், ஐந்து நிமிடத்திற்குமேல் அவரிடம் பேசவே இல்லை. ஆக நாட்டு வளர்ச்சி திட்டத்தைப்பற்றி பேச வந்த டாக்டர் சுவாமிநாதன் அவர்களிடம் அதுபற்றிப் பேச முடியாமல் போனாலும், அன்னையின் அருள் சூழலில் ஒருநாள் தங்கியிருந்து, மீண்டும் புதுடில்லிக்குத் திரும்பினார். இப்படி அன்னையின் அருள் சூழலில் தங்கியிருந்த

பலனாக அவருக்கு அடுத்தப் பதவி உயர்வு வந்தது. அதாவது International Rice Research Institute என்று பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில் ஒரு சர்வதேச ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று உள்ளது. அந்த ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி அவருக்கு அழைப்பு வந்து அந்த அழைப்பை ஏற்று அவர் மணிலாவிற்குச் சென்றார். இதற்கிடையில் Mr.Garry Jacobs அவர்கள் ஸ்ரீ கர்மயோகி அவர்களிடம் அமெரிக்க சீடராக வந்து சேர்ந்தார். தான் டாக்டர் சுவாமிநாதனிடம் நேரடியாகப் பேச முடியாவிட்டாலும், Mr.Garry Jacobs அவர்களை டாக்டர் சுவாமிநாதனிடம் நேரடியாக தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வைத்து அவரின் மூலம் தன் வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். இதன் விளைவாக ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கும் சுவாமிநாதன் அவர்களுக்கும் Mr.Garry Jacobs மூலம் உறவு நீடித்தது. சுவாமிநாதன் டாக்டர் பட்டம் பெற்றவர். ஒரு சர்வதேச ஸ்தாபனத்தில் தலைமை பொறுப்பு ஏற்பவர். அவரைப்போல் மற்றபிற விஞ்ஞானிகளுடன் பழகுபவர். அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருந்தவர் Mr.Garry Jacobs மூலம் வந்த அறிவுரைகளை கேட்டுக் கொள்ள வேண்டுமென்ற அவசியமேயில்லை. இருந்தாலும் ஆசிரமத்திலிருந்து வருபவர், அன்னையின் பக்தர், என்ற அந்த இடத்திற்கு ஒரு தனிப்பட்ட மரியாதை வைத்து, அவர் மூலம் வந்த அறிவுரைகளை எல்லாம் அமைதியாகக் கேட்டு செயல்படுத்திக் கொண்டிருந்தார். இத்தகைய receiptivity மிகவும் விசேஷமான ஒன்றாகும். இதன்பலனாக தொடர்ந்து அவரை வாழ்க்கையில் மேலும் மேலும் உயர வைத்தது. 1980-களில் World Food Price என்று ஒரு பரிசை அவருக்கு வழங்கினார்கள். அது கிட்டதட்ட நோபல் பரிசுக்கு சமமாகும். அவருடைய அறிவு கூர்மைமிக்க ஆராய்ச்சிக்குத்தான் அவருக்கு அந்தப் பரிசு கிடைத்திருப்பதாக அவரும் சரி, உலகத்தாரும் சரி நினைத்திருக்கலாம். ஆனால், அன்னையின் அருளைத் தாங்கி வருகின்ற ஸ்ரீ கர்மயோகி அவர்களின் தொடர்புதான் இந்தளவிற்கு அவரை வாழ்க்கையில் உயர வைத்துள்ளது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

1985-ஆம் ஆண்டளவில் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு உலக அமைதிக்காகவும், உணவு பற்றாக்குறையை அகற்றுவதற்காகவும் சர்வதேச வல்லுனர்கள் நிறைந்த ஒரு கமிஷன் அமைக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் தோன்றியது. இந்த கருத்தை Mr. Garry Jacobs அவர்களிடம் தெரிவித்து தலைசிறந்த விஞ்ஞானிகள் பலபேருடைய பெயரை குறிப்பிட்டு அவர்கள் எல்லோரையும் அணுகி கமிஷனில் உறுப்பினராக சம்மதிக்கிறார்களா? என்று விசாரிக்கச் சொன்னார். அணுகியவர்கள் அனைவருமே ஆர்வம் காட்டினார்கள். இருந்தாலும், கமிஷனில் சேர்மேனாக யார் வரப்போகிறார் அதைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறோம். அதன்பின் எங்கள் பங்களிப்பை உறுதி செய்கிறோம் என்றார்கள். ஸ்ரீ கர்மயோகி அவர்கள் இத்தகைய கமிஷனுக்கான Chairman பதவியில் இருப்பவர் சர்வதேச அளவில் பிரபலமானவராக இருக்க வேண்டும். அவர் ஒரு விஷயத்தை ஆதரித்துப் பேசினால், உலகத்தார் அதைக் கேட்டுக்கொள்ளும்படியானவராக இருக்க வேண்டும். மூன்றாவதாக அன்னையின் அருளைத் தாங்கிவரும் கருத்துகளுக்கு receiptive-வாக இருக்க வேண்டும். நான்காவதாக கமிஷன் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு எழுந்தால், எல்லோரையும் அனுசரித்து, கமிஷனின் ஒற்றுமைக் குலையாமல் கமிஷனை இயக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதால், இந்த மேற்கண்ட நான்கு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர் டாக்டர் சுவாமிநாதன்தான் என்று முடிவு செய்து, Mr. Garry Jacobs அவர்களிடம் சுவாமிநாதனை அணுகி இந்த Chairman பதவியை ஏற்றுக் கொள்ள முன்வருகிறாரா என்று விசாரிக்கச் சொன்னார். Mr. Garry Jacobs அவர்களும் அவரை அணுகி இம்மாதிரி வாய்ப்பு ஒன்று வந்துள்ளது ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டார். இந்த கமிஷனை உருவாக்க அப்பா அவர்கள் முடிவு எடுத்திருந்த நேரம் அமெரிக்காவிற்கும், சோவியத்யூனியனுக்கும் கடுமையான பனிப்போர் நடந்துகொண்டிருந்த நேரம். அமெரிக்காவிற்கு ஆதரவாக இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மெனி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும், சோவியத்யூனியனுக்கு ஆதரவாக போலந்து, செக்கோஸ்லோவேகியா, யுக்கோஸ்லோவியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்துகொண்டு ஐ. நா-வில் இரண்டு எதிரெதிர் அணிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பனிப்போரால் விளைந்த டென்ஷன் குறைந்தால்தான், உலகத்தில் அமைதி மலரவே வழிபிறக்கும். மேலும் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் அணு ஆயுதங்களை அழிக்க முன்வரவேண்டும். இதற்கு அமெரிக்காவும், சோவியத் யூனியனும் முன்வரவேண்டும். பனிப்போர் குறைய வேண்டுமானால் சோவியத் யூனியன்

அமெரிக்காவிற்குக் காட்டும் எதிர்ப்பைக் கைவிட வேண்டும். கைவிடாதபட்சத்தில் பனிப்போர் டென்ஷன் குறையவே வாய்ப்பில்லை. இந்தப் பனிப்போர் விஷயங்களை எல்லாம் டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் நன்கறிவார். இப்படிப்பட்ட பனிப்போர் டென்ஷனை குறைக்க ஒரு சர்வதேச கமிஷன் அமைக்கிறார்கள் என்றால் அந்த கமிஷனுடைய இலட்சியங்கள் எல்லாம் நிறைவேறாது என்று அவர் நினைத்திருந்தால், அந்த சேர்மேன் பதவியை ஏற்றுக் கொள்ள அவர் முன்வந்திருக்கவே மாட்டார். ஆனால் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. இந்த கமிஷனின் சேர்மேன் பதவிக்கு சந்தோஷமாக ஒப்புக் கொண்டார். இந்தக் கட்டத்தில்தான் அன்னையின் அருள் தீவிரமாக செயல்பட ஆரம்பித்தது. சோவியத் யூனியனில் கம்யூனிச ஆட்சியின் கெடுபிடிகளை தளர்த்தி கம்யூனிசத்தை people friendly-யாக ஆக்க வேண்டும் என்று அப்போது சோவியத் அதிபராக இருந்த திரு. கோர்பசேவ் அவர்களுக்கு ஒரு புரட்சிகரமான எண்ணம் தோன்றியது. இதை அவர் ரஷ்யாவில் செயல்படுத்த துவங்கினார். இந்த செய்தி காட்டுத்தீபோல் மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. அந்த நாடுகளும் கம்யூனிச ஆட்சியின்கீழ் இருந்ததால் ரஷ்யாவில் கெடுபிடிகளை தளர்த்துவதுபோல் மற்ற நாடுகளிலும் தளர்த்தமாட்டார்களா என்று மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அதிலும் குறிப்பாக கம்யூனிச ஆட்சியில் இருந்த ஜெர்மெனியில், கிழக்கு பெர்லினையும், மேற்கு பெர்லின் நகரத்தையும் இரண்டாகப் பிரித்த பெர்லின் சுவரை இடிக்கமாட்டார்களா என்று மக்களிடையே கோரிக்கை எழுந்தது. கிழக்கு ஜெர்மெனியில் பெரிய போராட்டம் தோன்றி இருக்கிறது என்று சோவியத் அதிபருக்குத் தகவல் போனபோது அவருடன் இருந்த கம்யூனிச அதிகாரிகளெல்லாம் ரஷ்ய ராணுவத்தை கிழக்கு ஜெர்மெனிக்கு அனுப்பி அங்கே வலுக்கின்ற கம்யூனிச எதிர்ப்புப் போராட்டத்தை அடக்குவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த நேரத்தில் கோர்பசேவ் அவர்கள் ஒரு வித்தியாசமான முடிவை எடுத்தார். அதாவது கிழக்கு ஜெர்மெனியில் கம்யூனிசத்திற்கு எதிராக வன்முறை வெடித்தாலும், ரஷ்ய ராணுவம் தலையிடாது கிழக்கு ஜெர்மெனிய அரசே அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவித்தார். ரஷ்யா தலையிடாது என்று தெரிந்தவுடன் கிழக்கு ஜெர்மெனிய மக்கள் கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தி பெர்லின் சுவரையே இடிக்க ஆரம்பித்து விட்டார்கள். இதனைக் கண்ட கிழக்கு ஜெர்மெனியில் ஆட்சி செய்து கொண்டிருந்த கம்யூனிச கட்சி நிலைகுலைந்து போனது. கம்யூனிசமே வேண்டாம் என்ற மக்கள் கோரிக்கைக்கு ஆட்சி செய்து கொண்டிருந்த கம்யூனிச அரசு அடிபணிந்து ஆட்சியை விட்டு விலகியது.

கிழக்கு ஜெர்மெனியில் கம்யூனிச ஆட்சி விழுந்தது என்று தெரிந்தவுடன் மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, ரூமேனியா, யுக்கோஸ்லோவியா, போலந்து போன்ற எல்லா நாடுகளும் கம்யூனிச எதிர்ப்புப் போராட்டங்களை தீவிரப்படுத்தின. கிழக்கு ஜெர்மெனியில் எப்படி ரஷ்ய ராணுவம் தலையிடவில்லையோ அம்மாதிரியே இங்கும் ரஷ்ய ராணுவம் தலையிடவில்லை. இதன் விளைவாக இந்த நாடுகளில் எல்லாம் ரஷ்யாவின் ஆதிக்கம் முடிவுக்கு வந்து கிழக்கு ஜெர்மெனி விடுதலைப் பெற்றது போலவே இந்த நாடுகளும் கம்யூனிச ஆதிக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றன. ரஷ்யாவிலிருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் விடுதலைப் பெறுகின்றன என்றறிந்த ரஷ்ய நாட்டு கம்யூனிஸ்டுகள் எல்லாம் இதற்கு மூலகாரணம் திரு. கோர்பசேவ் என்று எண்ணி அவர்மேல் கோபம் கொண்டு அவரை கடத்திச் சென்றுவிட்டனர். கிரிமியா மாநிலத்தில் கடற்கரையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபோது அவர் கடத்தப்பட்டார். இதை அறிந்த ஸ்ரீ கர்மயோகி அவர்கள் தன் வெளிநாட்டு சீடர்களை சேர்த்துக் கொண்டு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மூன்று நாட்கள் பிரார்த்தனை செய்தால், அவர் விடுவிக்கப்படுவார் என்று நம்புகிறீர்களா என்று கேட்டார். அவர்கள் உங்கள் வார்த்தைகளை நம்புகிறோம், உங்களை நம்புகிறோம் மூன்று நாட்கள் பிரார்த்தனை செய்தால் விடுவிக்கப்படுவார் என்று எங்களுக்கும் தெரிகிறது. ஆகவே நாமெல்லாம் சேர்ந்து அந்த பிரார்த்தனையை செய்வோம் என்று வேலை எல்லாவற்றையும் விட்டுவிட்டு பிரார்த்தனையில் அமர்ந்தார்கள். இதற்கிடையில் சோவியத் யூனியனின் ஓர் அங்கமாக இருந்த ரஷ்யாவில் எல்சின் என்பவர் அதிபராக இருந்தார். அவர் ரஷ்யாவில் கம்யூனிசம் போக வேண்டும். அதனால் சோவியத் யூனியன் என்ற அமைப்பிலிருந்து நாங்கள் பிரிந்து விடுகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இவ்வாறு அவர் பேசுவது கோர்பசேவிற்குப் பிடிக்காமல் இருந்தது. கம்யூனிசத்தை கைவிட வேண்டாம், அதன் கெடுபிடிகளை தளர்த்திக் கொள்ளலாம் என்று கோர்பசேவும் எல்சினுக்கு சமாதானம் சொல்லிக்கொண்டே

வந்தார். இந்த நிலையில் கோர்பசேவ் கடத்தப்பட்டதை அறிந்த எல்சின் நமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், என்ன இருந்தாலும் அவரை கடத்துவது என்பது சரியில்லை. அவரை மீட்டே ஆக வேண்டும் என்று முடிவு செய்து ரஷ்ய ராணுவ வீரர்களை கிரிமியா நகரத்திற்கு அனுப்பி தீவிரவாதிகளுடன் போரிட்டு கோர்பசேவ் அவர்களை மீட்டார். மூன்று நாட்கள் பிரார்த்தனையில் அமர்ந்திருந்த ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு இந்த செய்தி காதில் தேனாகப் பாய்ந்தது.

திரும்பி ரஷ்ய அதிபர் பதவிக்கு வந்த கோர்பசேவ் அவர்கள் அடுத்த ஆறு மாதங்கள்தான் இந்த பதவியில் நீடித்தார். சோவியத் யூனியன் என்ற அமைப்பே சரிபட்டு வராது எங்கள் அனைவரையும் சுதந்திரமாக விட்டுவிடுங்கள் எங்கள் வாழ்க்கையை நாங்களே நிர்ணயித்துக் கொள்கிறோம் என்று ரஷ்யா, உக்ரெயின், கஜகஸ்தான், டர்க்மேனிஸ்த்தான் என்று சோவியத் யூனியனில் அங்கம் வகித்த எல்லா நாடுகளும் கோஷம் எழுப்ப ஆரம்பித்து விட்டன. கம்யூனிசத்தின் கெடுபிடிகளைத் தளர்த்தி சோவியத் யூனியனாகவே செயல்பட முடியும் பிரிந்துப் போகவே தேவையில்லை என்று கோர்பசேவ் அவர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் யாரும் கேட்பதாக இல்லை. ஆகவே இதற்குமேல் சோவியத் யூனியனின் அதிபராக நீடிப்பதில் அர்த்தமில்லையென்று முடிவு செய்த அவர் தன் அதிபர் பதவியை ராஜினாமா செய்தார். அதுவரை ஆட்சியில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் அதிகாரத்திலிருந்து விலகுவதாக அறிவிப்பு செய்தது. சோவியத் யூனியனில் அங்கம் வகித்த 17 நாடுகளும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து போயின. இப்படிப் பிரிந்துபோன எல்லா நாடுகளிலும் ரஷ்யா உட்பட ஜனநாயக கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு ஜனநாயக நாடுகளாக மாறின. அமெரிக்காவிற்கு எதிரியாக செயல்பட்ட சோவியத் யூனியன் அதிகாரப்பூர்வமாக இல்லை என்று அறிவிக்கப்பட்டபின் 45 ஆண்டுகளாக நிலவிவந்த அமெரிக்க சோவியத் பனிப்போர் முடிவிற்கு வந்தது. சோவியத் யூனியனின் அணு ஆயுத தாக்குதலுக்கு ஆளாகிட நேரிடுமோ என்ற பயம் மேற்கு ஐரோப்பிய நாடுகளை விட்டது. உலக அமைதிக்குப் பெரிய உதவி செய்ததாக திரு. கோர்பசேவ் அவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. உலகத்தை ஆட்டிப் படைத்த அமெரிக்கப் பனிப்போர் டென்ஷன் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் எதிர்பார்த்தபடி முடிவிற்கு வந்தது. அந்த மாபெரும் சாதனையில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் தொடங்கிய உலக அமைதி மற்றும் சர்வதேசக் கமிஷனுடைய பங்கு என்ன என்று நாம் கேட்கலாம்.

மேற்பார்வையாகப் பார்த்தால், கமிஷனுடைய முதல் மீட்டிங் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே சோவியத் யூனியனில் கம்யூனிச ஆட்சிக் கவிழ்ந்து பனிப்போர் முடிவிற்கு வந்துவிட்டிருந்தது. அப்படிப் பார்த்தால், கமிஷன் அதனுடைய வேலைகளை தொடங்குவதற்கு முன்பே அது சம்பந்தப்பட்ட வேலைகள் நிறைவுபெற்றுவிட்டன என்றாகிவிட்டது. அப்பட்சத்தில் கமிஷன் என்னதான் வேலை செய்தது என்ற கேள்வி எழுகிறது. ஆனால் நாம் வேறு வகையாகவும் இதே விஷயத்தைப் பார்க்கலாம். பொதுவாக ஸ்ரீ கர்மயோகி அவர்கள் இப்படி சொல்வதுண்டு. அதாவது அருள் செயல்படும் இடங்களில் எல்லாம் முடிவான பலனை முதலிலேயே அருள் வழங்குவதுண்டு என்றும் அவர் கூறியுள்ளார். அப்படித்தான் கமிஷன் விஷயத்திலும் நடந்துள்ளது என்று நாம் சொல்ல வேண்டும். கமிஷனுடைய நோக்கம் என்ன? அமெரிக்க சோவியத் யூனியனுக்கிடையே உள்ள பனிப்போர் முடிவுக்கு வரவேண்டும். உலகத்தில் அமைதி நிலவ வேண்டும். இப்படிப்பட்ட உயர்ந்த நோக்கத்தை அன்னையே ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. அதனால் தானோ என்னவோ கமிஷன் முதல் மீட்டிங் நடத்துவதற்கு முன்னதாகவே கமிஷனுடைய வேலையை அன்னையே முடித்து வைத்து விட்டார். இப்படி அருள் செய்வதை நாம் நிறைய இடங்களில் பார்க்கத்தான் செய்கிறோம். உதாரணமாக ஒரு அன்னை அன்பர் தன்னுடைய பெண்ணிற்கு வரன் பார்க்க வேண்டும் என்று எண்ணும்பொழுது நல்ல வரனாக பார்த்து எல்லாம் பொருத்தமாக அமைந்து திருமணம் நிச்சயமாவதற்கு குறைந்தது இரண்டு வருடங்கள் ஆகும் என்று கணக்குப் போடுவார். ஆனால் அன்னையிடம் இது சம்பந்தமாக தெரிவித்து விட்டு அந்த வேலையில் இறங்கும்பொழுது எடுத்த எடுப்பில் பார்க்கின்ற முதல் வரனே திருப்தியாக அமைந்து 2 வருட வேலை 2 வாரங்களிலேயே முடிந்து விடுவதுண்டு. அம்மாதிரியே எத்தனையோ தேர்வுகளுக்கும், நேர்காணல்களுக்கும் பின்னர்தான் நல்ல வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, முதல் நேர்காணலிலேயே நல்ல வேலை, நல்ல சம்பளத்தில் அமையக் கூடிய அதிர்ஷடம், அன்னை அன்பர்களுக்கு உண்டு. இம்மாதிரி கமிஷனுடைய நோக்கம் அபார வெற்றி அடைந்ததை கண்டு திரு. சுவாமிநாதன் அவர்கள் அளவற்ற

மகிழ்ச்சி அடைந்தார். அடுத்ததாக கமிஷனுடைய இரண்டாண்டு பணிகள் நிறைவு பெற்ற பொழுது கமிஷனுடைய கண்டுபிடிப்புகளை ஒரு ரிப்போர்ட்டாக எழுதி UNO-வினுடைய secretary-இடம் திரு. சுவாமிநாதன் அவர்கள் சமர்ப்பித்தார். அச்சமயம் secretary-யாக செயல்பட்டுக் கொண்டிருந்தவர் திரு. Boutros Gally என்பவர் அவர் அந்த கமிஷன் ரிப்போர்ட்டை வாங்கி படித்துவிட்டு என்னுடைய 5 ஆண்டுகள் பணியில் எத்தனையோ கமிஷன் ரிப்போர்ட்களை படித்திருக்கிறேன். ஆனால் அந்த ICPF கமிஷனுடைய ரிப்போர்ட் மாதிரி வேறெந்த கமிஷன் ரிப்போர்ட்டையும் தான் பார்த்ததில்லை. அவ்வளவு அர்த்தபுஷ்டியாக அது அமைந்துள்ளது" என்று புகழாரம் சூட்டினார். ஆகவே திரு. சுவாமிநாதன் அவர்கள் வருகின்ற வாய்ப்புகளை மறுப்பதில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் இயங்கிய பொழுது வாழ்க்கை எப்படி அவரை படிப்படியாக உயர வைத்து ஒரு சர்வதேச கமிஷனின் சேர்மேன் பதவிக்கு உயர்த்தியது என்பதை நாம் இங்கே அழகாகப் பார்க்கிறோம்.

**2 உண்மைக்கும் பொய்மைக்குமிடையே நிகழ்கிற போராட்டத்தில் பொய்யின் கை ஓங்கி இருப்பதாகத் தெரிந்தாலும், இறுதியில் உண்மைக்குதான் வெற்றிக் கிடைக்கிறது.**

வாழ்க்கையில் பொய்யின் கை ஓங்கியிருப்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். நம் நாட்டில் வெளியிடப்படும் திரைப்படங்களில் நாம் இதைப் பார்க்கிறோம். பணக்கார வில்லன் ஏழைக் கதாநாயகனை பலவகையாக இம்சை செய்வான். அவன்மேல் பொய் கேஸ் போட்டும் உள்ளே தள்ளுவான். அவனுக்குரிய கதாநாயகியை இவன் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயல்வான். சிறைவாசம் முடிந்து வெளிவரும் கதாநாயகன் தன்பக்கம்தான் நியாயம் இருக்கிறது என்பதற்கு தகுந்த ஆதாரங்களை திரட்டி அவற்றைக் கோர்ட்டில் சமர்ப்பித்து இறுதியாக உண்மை தன் பக்கம் உள்ளது என்று நிரூபித்து வெற்றிக் காண்பான். ஆங்கிலேயரின் இலக்கியத்திலும் நாம் இதையேத்தான் பார்க்கிறோம். விக்கம் போன்ற இளைஞர்கள் தங்களுடைய பணிவான இதமான நன்னடத்தையால் தான் உண்மையில் நல்லவன் என்பதைப்போல் மற்றவர்களை நம்பவைத்து உண்மையிலேயே நல்லவனான டார்சி போன்றவர்களை கெட்டவனாக்கி விடுகிறான். பாதிக் கதைவரையிலும் விக்கம்தான் நல்லவன், டார்சிக் கெட்டவன் என்ற கருத்தே நிலவுகிறது. கதையில் பாதிக்கட்டத்திற்குமேல்தான் விக்கம் சொல்வதெல்லாம் பொய் உண்மையில் இதுதான் நடந்தது என்று டார்சி விஷயத்தை எடுத்துப் பேசும்வரையிலும் விக்கம் நல்லவனாகவே வலம்வந்துகொண்டிருந்தான். நம் நாட்டு இலக்கியமான மகாபாரதத்தில் பொய்யின் கை எப்படி ஓங்கி இருக்கிறது என்பதை நாம் நன்றாகவேப் பார்க்கிறோம். நயவஞ்சகமாக சூதாட்டத்தில் தோற்கடித்து பாண்டவர்களுக்குரிய ராஜ்ஜியத்தை அவர்களிடமிருந்து பிடுங்கி ஒன்றுமில்லதவர்களாக அவர்களை காட்டிற்கு அனுப்புகிறார்கள். வனவாசம் முடிந்து உரிய நிலத்தைத் திருப்பிக் கேட்கும்போது, ஊசிமுனை நிலம்கூட கிடையாது என்று துரியோதனன் மறுத்துவிட்டான். அவதாரமாகிய கிருஷ்ண பகவான் பாண்டவர் பக்கம் இருந்ததால், அவர்களுடைய உண்மைக்கு தெய்வீக பலம் கிடைத்து, இறுதியில் பாண்டவர்கள் வெற்றிப் பெறுகிறார்கள். இப்படி கிருஷ்ண பகவானின் தெய்வீக பலம் அவர்களுக்கு ஆதரவாகக் கிடைக்காமல் இருந்திருந்தால், துரியோதனனின் பொய்யின் பலம்தான் இறுதிவரையில் ஜெயித்திருக்கும்.

இப்படி பொய்யின் ஆதிக்கம் சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் நீண்ட காலமாகக் கொடிகட்டிப் பறந்து வந்துள்ளது. இதெல்லாம் சமீபகாலமாகத்தான் உடைத்தெறியப்பட்டுள்ளன. உதாரணமாக பதினைந்தாம் நூற்றாண்டுவரை சூரியன் பூமியை சுற்றி வருகிறது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அம்மாதிரியே பூமி உருண்டை என்பதையே புரிந்து கொள்ளாமல் அது தட்டையானது என்றுதான் நம்பிவந்தார்கள். பூமியை சூரியன் சுற்றி வருகிறது என்றால், அந்த அடிப்படையில்தான் ஜோதிடக்கலையே உருவானது. அந்த அடிப்படையில்தான் ஜாதகங்களும் கணிக்கப்பட்டன. போலந்து நாட்டு விஞ்ஞானி Cupper Nicas அவர்கள் இது உண்மையே இல்லை. பூமிதான் சூரியனை சுற்றிவருகிறது, பூமி உருண்டையானது, தட்டையானதே கிடையாது என்று விஞ்ஞான ஆதாரங்களுடன் நிரூபித்த பொழுது அவருக்கு பெரிய எதிர்ப்புக் கிளம்பியது. கத்தோலிக்க மடமும் இந்த எதிர்ப்பில் சேர்ந்துகொண்டு Cupper Nicas அவர்கள் கூறியவைகளை வாபஸ் வாங்கும்படி வலியுறுத்தியது. பூமி சூரியனை சுற்றினால் என்ன? அல்லது சூரியன் பூமியைச் சுற்றினால் என்ன? இதற்கும் கத்தோலிக்க மதத்திற்கும் என்ன சம்பந்தம்? ஒரு

சம்பந்தமுமில்லை. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. பொய்யான விஷயம்தான் உண்மை என்ற முடிவை கத்தோலிக்க மதம் ஆதரித்து அதற்கென்று ஒரு போராட்டமே நிகழ்த்தியது. இறுதியில் Cupper Nicas அவர்களின் வாதம்தான் ஜெயித்தது. இதேமாதிரி ஒரு நிலைமை 19-ஆம் நூற்றாண்டில் சார்லஸ் டால்வின் என்ற விஞ்ஞானிக்கும் வந்தது. அதுவரையிலும் மனிதன் எப்படி தோன்றினான் என்பதுபற்றி பைபிளில் சொன்னதைத்தான் மக்கள் நம்பினார்கள். பைபிளில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், மனிதனையும், மற்ற விலங்குகளையும் 6000 வருடங்களுக்குமுன் இறைவன் நேரடியாகப் படைத்தார். டார்வின் அவர்கள் செய்த விஞ்ஞான ஆராய்ச்சி உண்மையே இல்லை என்று தெரிய வந்தது. அதாவது மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் அவன் நேரடியாக ஆண்டவனால் படைக்கப்படவில்லை என்று அவர் கண்டறிந்தார். அதை அவர் ஒரு புத்தகமாக வெளியிட்டபோது கத்தோலிக்க மதத்திற்கு பெரிய இடி விழுந்ததுபோல் இருந்தது. இதை அவர்கள் வன்மையாக மறுத்தார்கள். இறுதியில், டார்வினும் அவரைப்போன்ற விஞ்ஞானிகளும் தம்முடைய கூற்றில் உறுதியாக நின்றதால், கத்தோலிக்க மதம் பின்வாங்கியது. இருந்தாலும் இன்றும்கூட கத்தோலிக்க மடம் நடத்தும் பள்ளிகளில் டார்வினுடைய பரிணாமக் கொள்கை போதிக்கப்படுவதில்லை.

விஞ்ஞானம் எப்படி பொய்யின் பிடியில் சிக்கி தவித்ததோ அம்மாதிரியே சமுதாயமும் பொய்யின் பிடியில் நீண்டநாட்கள் சிக்கி சமீபத்தில்தான் உண்மையை நிலைநாட்ட ஆரம்பித்தன. 20-ஆம் நூற்றாண்டின் பாதிவரையில் உலகமெங்கும் முடியாட்சிதான் நிலவியது. அதாவது மன்னர்கள் இறைவனின் பிரதிநிதிகள், அந்த வகையில் அவர்கள்தான் நாட்டை ஆளப்பிறந்தவர்கள் என்று ஒரு கொள்கையையே ராஜ வம்சங்கள் தங்களுக்குக் கீழிருக்கும் குடிமக்களிடம் பரப்பி வந்தார்கள். இதையே உண்மை என்று ஏற்றுக்கொண்டு பல நாடுகளில் குடிமக்கள் முடியாட்சிக்கு அடங்கியிருந்தார்கள். 19-ஆம் நூற்றாண்டில்தான் ஜனநாயக புரட்சியாளர்கள் இந்த அரசர்கள் இறை பிரதிநிதகள் என்ற கூற்றில் உண்மையே இல்லை. மக்கள் தங்களை தாங்களே ஆண்டு கொள்ளலாம். அதற்கு ஜனநாயகம் வழி செய்யும் என்று மக்கள் மனதை மாற்றி உலகெங்கும் முடியாட்சியிலிருந்து மக்களை குடியாட்சிக்கு மாற்றினர். இப்படி முடியாட்சியிலிருந்து குடியாட்சிக்கு சமூகம் மாறியதுபோல் இன்னும் பல பொய்யான சமூக ஸ்தாபனங்களிலிருந்து சமூகம் மாற மானிட சமுதாயம் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

இம்மாதிரி எத்தனையோ பொய்களின் அடிப்படையில் உலகில் பலவிதமான ஸ்தாபனங்கள் செயல்பட்டு இப்போதுதான் உண்மையில் தன்னை நிலைநாட்ட ஆரம்பித்து இருக்கிறது. 16 அல்லது 17-ஆம் நூற்றாண்டுகள் அளவில் ஒற்றுமை இல்லாமல் இருந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை ஆக்கிரமிப்பு செய்ய விரும்பிய ஐரோப்பிய நாடுகள் ஒரு மிகப்பெரிய பொய்யை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தின. ஆசிய, ஆப்பிரிக்க நாட்டு மக்களிடம் ஐரோப்பியர்கள் என்ன கூறினார்கள் என்றால், உங்களுக்கு எல்லாம் நாகரிகமோ, கலாச்சாரமோ கிடையாது, நாங்கள்தான் இவற்றை உங்களுக்குக் கற்றுத்தர வேண்டும். அதன்பொருட்டு நாங்கள் உங்களை ஆட்சி செய்ய வேண்டும், இதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதன் கொடுமை என்னவென்றால், ஆசிய, ஆப்பிரிக்க நாட்டு மக்களும் இந்த அப்பட்டமான பொய்யை உண்மை என்று நம்பி ஒத்துழைப்புத் தரவும் முன்வந்தார்கள். உண்மையில் கலாச்சார ரீதியாகப் பார்த்தால், இந்தியர்கள் மேற்கத்தியவர்களைவிட எவ்வளவோ மேம்பட்டர்வர்கள். நமக்கு தினசரி குளிக்கும் பழக்கம் உண்டு. ஆங்கிலேயர்கள் மாதம் ஒருமுறைதான் குளிப்பார்கள். திருமணம் என்று இந்தியர்களுக்கு ஆகிவிட்டால், கட்டிய மனைவியோடுதான் கணவர்கள் வாழ்வார்கள். ஆனால் ஆங்கிலேயர்களோ அவர்கள் இஷ்டத்திற்கு விவாகரத்து செய்து, பலமுறை திருமணம் செய்துகொள்வார்கள். இந்தியர்கள் பிரம்மத்தை அறிந்தவர்கள். ஐரோப்பியர்களுக்கு பிரம்மம் என்றால் என்னவென்றே தெரியாது. இறைவனும், உலகமும் ஒன்றே என்று நம் இந்திய ஆன்மிகம் சொல்கிறது. அப்படிப்பட்ட தத்துவங்களே ஐரோப்பியர்களுக்குக் கிடையாது. அவர்கள் ஜெகோவா என்ற கடவுளைதான் வழிபடுகிறார்கள். அன்னை தன்னுடைய அஜெண்டாவில் ஜெகோவா ஒரு அசுரன் என்று குறிப்பிட்டுள்ளார். இப்படி ஆன்மிக சிறப்புமில்லாத, சுத்தமுமில்லாத ஐரோப்பியர்கள் நமக்கு நாகரிகம் கற்றுக் கொடுக்க வந்ததாகச் சொல்வது என்பது அப்பட்டமான பொய்யாகிறது. நம்முடைய சிறப்பு என்னவென்று நமக்கேத் தெரியாமல், அவர்கள் சொன்ன பொய்யை நம்பி நாம் அடிபணிந்திருந்தது அதைவிடக் கொடுமையாகும். அந்த பொய்யை உடைத்தெறிந்தவர் மகாத்மாகாந்தி அவர்கள். நம்மை நாமே ஆண்டுகொள்ள முடியும்.

வெள்ளையர்களின் தயவே தேவையில்லை. நம் கலாச்சார சிறப்பே நமக்குப் போதும். அந்நியர்களின் கலாச்சாரத்தை எல்லாம் காப்பியடிக்கவே தேவையில்லை என்று இருபது வருடங்கள் தீவிர பிரச்சாரம் செய்து இந்தியர்களின் விழிப்புணர்வை தட்டி எழுப்பி சுதந்திரத்தை வாங்கித்தந்தார்.

நம் நாட்டில் பொய்யின் அடிப்படையில் உருவான சமூக ஸ்தாபனங்கள் நிறையவே உள்ளன. பிறப்பால் அனைவரும் சமம். ஆனால் அவரவரின் சாதனையால் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று வேறுபடுகிறார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் இந்திய மண் சாஸ்த்திரம் இந்த உண்மையை பொய்யாக மாற்றியுள்ளது. அதாவது அந்தணர்கள் பிறப்பிலேயே உயர்ந்தவர்கள். ஆனால் ஹரிசன மக்கள் பிறப்பிலேயே தாழ்ந்தவர்கள். இப்படி சொல்வதால், பிறப்பிலிருக்கும் அடிப்படை சமத்துவம் போகிறது. அந்த பொய்யை மேலும் வலுப்படுத்த மனுசாஸ்த்திரம் புராணக் கதை வேறொன்று கூறுகிறது. அதாவது உலகம் பிரஜாபதியிடமிருந்து தோன்றியதாகவும், அச்சமயம் அந்தணர்கள் பிரஜாபதியின் தலையிலிருந்து உதித்ததாகவும் ஹரிசன மக்கள் பிரஜாபதியின் காலிலிருந்து தோன்றியதாகவும் கூறினர். இப்படி காலிலிருந்து தோன்றியவர்கள், தலையிலிருந்து தோன்றியவர்களுக்கு சேவை செய்திருப்பதுவே அவர்களுடைய தலையாய பணி என்பதையும் புராணக் கதை வலியுறுத்தியது. இப்படி கீழ்ஜாதி மக்கள் உயர்ந்த ஜாதி மக்களுக்கு சேவை செய்ய இருக்க இவ்வாறு வலியுறுத்தியதால், கீழ்ஜாதி மக்களுக்கு வாழ்க்கையில் முன்னேறும் எண்ணமே போய்விட்டது. படிப்பின்மை போய்விட்டது, கௌரவமான தொழில் செய்யும் உரிமைப் போய்விட்டது. ஊரில் வசிக்கும் உரிமை போய்விட்டது. கோவிலுக்கு சென்று கடவுளை வழிபடும் உரிமைப் போய்விட்டது. ஹரிசன மக்களும் இப்படிப்பட்ட பொய்யை நம்பி 2000 வருடங்கள் வாழ்ந்தும்விட்டனர். இக்காலக்கட்டத்தில்தான் காந்திஜி அவர்கள் ஜாதி ஏற்றத்தாழ்வுகளில் உண்மையே இல்லை. பிறப்பால் மனிதன் தாழ்ந்து போவதில்லை. தன்னை முன்னேற்றிக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அதன்படி பார்க்கும்போது ஹரிசன மக்களுக்கும் படிப்புரிமை உண்டு. கௌரவமான தொழில் செய்யும் உரிமை உண்டு. ஊரில் மற்றவர்களுடன் வசிக்கும் உரிமை உண்டு. கோவிலுக்குள் சென்று கடவுளை வழிபடும் உரிமை உண்டு என்று கூறி அவர்கள் இழந்த அனைத்து உரிமைகளையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களையும் மனிதர்களாக்கினார். அவரே அக்காரியத்தைச் செய்யாமல் போயிருந்தால், இன்றுவரை ஹரிசன மக்கள் சமூகத்தின் அடிமட்டத்தில்தான் இருந்திருப்பார்கள். ஹரிசன மக்களை இந்திய சமுதாயம் எப்படி ஓரம் கட்டியதோ, அம்மாதிரியே பெண்களையும் ஓரம் கட்டியது. மனு சாஸ்திரத்தில் பெண்கள் ஆண்களின் புனிதத்தைக் கெடுக்க இருப்பவர்கள். அதனால் பெண்களைக் கண்டாலே ஆண்கள் விலகிப் போகவேண்டும் என்று பெண்களைப்பற்றி இழிவாகக் குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாட்டில் பெண்புத்தி பின்புத்தி என்று ஒரு பழமொழியும் இப்படிப் புனிதத்தைக் கெடுக்கப் பிறந்தவர்கள் என்று மனுசாஸ்திரத்தில் எழுதியுள்ளதாலோ என்னவோ பெண்ணினமே ஆணினத்திற்கு அடங்கியிருக்க வேண்டும் என்று பழங்கால இந்திய சமூகம் பெண்களை ஒரு கடுமையான கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருந்தது. இதன் விளைவாக அவர்களுக்கு படிக்கும் உரிமைப் போயிற்று. வேலைக்கு சென்று சம்பாதிக்கும் உரிமைப்போயிற்று சொத்தில் பங்கு பெரும் உரிமைப் போயிற்று. விதவையானால் மறுமணம் செய்யும் உரிமைப் போயிற்று என்று படிப்படியாக எல்லா உரிமைகளையும் இழந்து வெறும் வீட்டு வேலை செய்து வீட்டில் முடங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டது. ஆனால் ஜனநாயகம் இந்தியாவிற்கு அறிமுகமாகியபொழுது பொய்யின் அடிப்படையில் பிறந்த இந்த எல்லாக் கட்டுப்பாடுகளுமே தளர்த்தப்பட்டன.

பெண்களுக்கு படிப்புரிமை வந்தது. இதன்பின் தொடர்ந்து ஓட்டுப் போடும் உரிமை, வேலை செய்யும் உரிமை, சொத்தில் பங்கு கேட்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை என்று எல்லா உரிமைகளும் படிப்படியாக வந்துவிட்டன. இம்மாதிரியே தொழிலாளர் வர்க்கமும் எந்த உரிமையும் இல்லாமல் கொடுத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். விவசாய வேலை என்றால், காலை 6 மணிக்கு வந்து மாலை 6 மணிவரையிலும் வேலை செய்துவிட்டு வெறும் ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிய நாட்கள் உண்டு. அம்மாதிரியே கம்பெனிகளில் வேலை செய்த ஊழியர்கள் 30 வருடங்கள் வேலை செய்திருந்தாலும் ஒரு ஓய்வு ஊதியமோ, மற்றும் பணிக்கொடையோ எதுவுமே பெறாமல் வீட்டிற்கு அனுப்பிய காலமும் உண்டு. அதாவது நிலத்தில் வேலை செய்தவர்களும் சரி, கம்பெனியில் வேலை செய்தவர்களும் சரி தம்முடைய அடிப்படை உரிமைகள் என்ன என்பதையும்

உணராமல் இருந்தார்கள். அந்த அறியாமையைப் பயன்படுத்தி முதலாளி வர்க்கத்தினர் வேலை செய்வது உங்கள் கடமை சம்பளம் தருவது எங்கள் உரிமை நாங்கள் கொடுப்பதை நீங்கள் வாங்கிக் கொண்டுப் போகவேண்டும் என்று கூறி உழைக்கும் வர்க்கத்தினரை ஏமாற்றி வந்தனர். அந்தக காலக்கட்டத்தில்தான் காரல்மார்க்ஸ் அவர்கள் தங்கள் கம்யூனிஸ்ட் மனிபஸ்டோவுடன் அறிமுகமானார். அதில் அவர் முதலாளி வர்க்கத்தினர் உங்களை எல்லாம் ஏமாற்றுகிறார்கள். உங்களுக்கு தரவேண்டிய சம்பளத்தைக் கொடுக்காமல் தான் அதை எல்லாம் தங்களுடைய தொழிலின் முதலீட்டாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இப்படிப் பார்த்தால், முதலாளிகளின் முதலீடு உழைப்பாளிகளிடமிருந்து திருடப்பட்ட சம்பளமாகும் என்று முதலாளிகளின் ஏமாற்று வேலையை அம்பலமாக்கினார். இதனால் கம்யூனிஸம் காட்டுத் தீபோல் பரவியது, ரஷ்யா, சைனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்று எல்லாமே கமயூனிசத்திற்கு மாறியது.

சில சமயங்களில் உண்மையான செயல்பாடுகளிலும் இயக்கங்களிலும்கூட பொய் ஏதோ ஒரு ரூபத்தில் கலந்துவிடுவதால், உண்மை பின்னுக்குத் தள்ளப்பட்டு பொய்யின் கை ஓங்கிவிடுகிறது. அன்னையைக் கேட்டால், ஆண்டவனின் படைப்பு அற்புதமான படைப்பு என்றுதான் சொல்கிறார். ஆனால் அந்த அற்புதத்தைக் காண முடியாம்ல் மனிதனுடைய அகந்தை என்ற ரூபத்தில் பொய் குறுக்கிடுகிறது. அகந்தையின் பார்வையில் பொய் குறுக்கிடுவதால் அவனுக்கு எல்லாமே தவறாகத் தெரிகிறது. அகந்தையை தூண்டிவிடுகிற தீய சக்திகளும் தாம்தான் தெய்வம் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பொய்யின் ஆட்சியை மேலும் வலுப்படுத்துகின்றன. பொய்யின் தலைவனான அசுர சக்திதான் ஹிட்லரை இவ்வாறு தன்வசப்படுத்தி இரண்டாம் உலகப்போரை தொடங்குமாறு தூண்டினான். ஆரிய வம்சம்தான் உயர்ந்த வம்சம் என்றும், ஜெர்மானியர்கள் ஆரியர்கள் என்பதால், அவர்கள்தான் உலகை ஆளப்பிறந்தவர்கள் என்றும் யூத இனத்து மக்கள் தாழ்ந்த வம்சத்தினர் என்பதால் அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் ரஷ்யர்கள், போலந்து நாட்டவர்கள் மற்றும் கிழக்கு ஐரோப்பியர்கள் எல்லோரும் தாழ்ந்த வம்சத்தினர் என்றும், அதனால் ஜெர்மானியர்கள் அவர்கள்மேல் போர்தொடுத்தும், அவர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்றும் ஹிட்லர் ஒரு பெரிய பொய்யை தேர்தல் பிரச்சாரமாக பயன்படுத்தி ஜெர்மனியையே தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். இந்த பொய்யை முழுமையாக நம்பிய ஜெர்மானிய மக்கள் யூதர்களை எல்லாம் சிறைப்பிடித்து விஷ வாயுவைப் பயன்படுத்தி ஏறக்குறைய அறுபது இலட்சம் யூதமக்களை சாகடித்தனர். ரஷ்யாவின்மேல் போர் தொடுக்க ஜெர்மானிய மக்களே ஊக்குவிக்க ஹிட்லர் நாமெல்லாம் ஆரியர்கள், ரஷ்யர்கள் தாழ்ந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் நாடு பெரியது என்றாலும், நம்மால் அவர்களை வீழ்த்த முடியும் அப்படி வீழ்த்தினோம் என்றால், அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு நாம் அவர்களை அடிமைகளாக வைத்திருக்கலாம் என்று அவர்களை ஊக்கப்படுத்தி ரஷ்யர்கள்மேல் படையெடுத்தனர். இத்தகைய அசுர சக்தியின் உந்துதலால் உலக நாகரிகத்திற்கே பேராபத்து வருவதை உணர்ந்த பகவான் இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அவர்களை தன்னுடைய கைதியாக்கி அவரின் மூலம் தன்னுடைய ஆன்மிக சக்தியை நேச நாடுகளின் சார்பாக செலுத்தி ஜெர்மனியின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடிக்கச் செய்தார். அசுர சக்திகள் முறியடிக்கப்பட்டதால், ஐரோப்பிய துணைக் கண்டம் ஜெர்மெனியிடமிருந்துக் காப்பாற்றப்பட்டது. ஐரோப்பாவைக் காப்பாற்றியதோடு பகவான் எடுத்த முயற்சி நின்று போகவில்லை. அதைத் தொடர்ந்து ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் எல்லாம் ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டன. எங்கெல்லாம் மன்னர் ஆட்சி நிலவியதோ அங்கெல்லாம் அது முடிவிற்கு வந்தது. இந்த இடங்களிலெல்லாம் ஜனநாயகம் அறிமுகமாகியது. தாழ்த்தப்பட்ட ஒதுக்கப்பட்ட சமூகத்தினர் எல்லோரும் சம உரிமைகளை அனுபவிக்க ஆரம்பித்தனர். இந்த முன்னேற்றம் போதாதென்று உலக அரசாங்கம் வரவேண்டும் என்று இப்போது உலக அரசியல் அரங்கங்களில் பேசப்பட்டு வருகிறது. பொய்யின் ஆட்சி வலுவிழந்து உண்மையின் ஆட்சி வலுப்பெறும் இவ்வேளையில் உண்மையின் கையை மேலும் வலுப்படுத்த அன்னை சத்திய ஜீவிய சக்தியை பூமியில் இறக்கிக்கொண்டு வந்துள்ளார். சத்திய ஜீவியம் முழுவதும் பூமியின் சூழலில் வெளிப்பட ஆரம்பித்தது என்றால், இன்று நமக்குப் பழக்கமான எல்லா பொய்யின் வெளிப்பாடுகளும் அழிந்துப்போய் உண்மையின் பூரண வெளிப்பாடு தெரிய வரும் என்று நாம் நம்பலாம்.

சில சமயங்களில் உண்மையை அடிப்படையாக வைத்து, உருவாகும் இயக்கங்கள்கூட நாளாவட்டத்தில் பொய்யின் தாக்குதலுக்கு ஆளாகி அதன் உண்மை தன்மையை இழந்துபோகின்றன. கம்யூனிச இயக்கம் இதற்கு நல்ல நிரூபணமாகும். காரல்மார்க்ஸ் அவர்கள் கம்யூனிசக் கொள்கையை உருவாக்கியபோது அரசாங்க அதிகாரத்திற்கு அவர் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தனியார் சொத்துக்களைப் பொதுவுடமையாக்கும்போது தற்காலிகமாக தொழிலாள வர்க்கத்தினுடைய சர்வாதிகாரம் இருக்கும் என்றார். பின்னர் அது மறைந்துவிடும். பொதுவுடமை சமூகம் தானே இயற்கையாகத் தன்னை வழிநடத்திக் கொள்ளும் என்றார். ஆனால் உண்மையில் நடந்தது வேறு. ரஷ்யாவில் 1912-ஆம் ஆண்டு கம்யூனிஸம் உற்பத்தியானபோது அந்த ஆட்சியை அழிக்க சுற்றி இருந்த ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவை நோக்கி படையெடுத்தன. இந்த போராட்டம் இரண்டு வருடங்கள் நீடித்தது. இதில் ரஷ்ய படைகளை வென்றதால், இதற்கு மேலாவது அரசாங்கத்தின் கெடுபிடிகள் தளரும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஆட்சி தளர்த்தப்படாமல் கெடுபிடிகள் நீட்டிக்கப்பட்டன. பொதுவுடைமை ஆட்சியில் தனிமனிதனுக்கு சுதந்திரம் கிடைக்கும் என்ற பொதுமக்களின் கனவு பொய்யாகியது. கெடுபிடிகள் ஏன் தளர்த்தப்படவில்லை என்ற பல காரணங்களை கம்யூனிச அரசு தெரிவித்தது. முதல் காரணமாக என்ன சொல்லப்பட்டது என்றால், மக்கள் உண்மையாக கம்யூனிச ஆட்சியை ஏற்கவில்லை. அரைகுறை மனதோடுதான் ஏற்றுள்ளனர். கம்யூனிச ஆட்சியைக் கவிழ்க்க எந்த நேரமும் ஆபத்து வரலாம், அந்த ஆபத்தைத் தவிர்க்க இராணுவம் எந்த நேரத்திலும் உஷாராக இருக்க வேண்டும். மக்களை அதற்கேற்றாற்போல் கெடுபிடியில் வைத்திருந்தால்தான், அவர்களாலும் ராணுவ உஷார் நிலையை ஆதரிக்க முடியும் என்று இந்த இரண்டு காரணங்களைச் சொல்லி 1917-லிருந்து, கிட்டத்தட்ட 1987 வரை சோவியத் அரசாங்கம் மக்களை கடுமையான கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தது. ஆனால் 87-இல் ஆட்சிக்கு வந்த கோர்பசேவ் அவர்கள் மக்கள்மேல் திணிக்கப்பட்ட கெடுபிடிகளைக் கண்டு மனம் இறங்கினாற்போல் தெரிகிறது. பொதுமக்களுக்கு சுதந்திரம் அளிக்கத்தானே கம்யூனிச ஆட்சியையே உருவாக்கினோம், ஆனால் இத்தனை ஆண்டுகாலம் என்னென்னவோ பொய்களைச் சொல்லி, மக்களை கடுமையான கட்டுபாட்டிற்கு ஆளாக்கி இருக்கிறோம். நாம் செய்வது தவறு. நாம் வாக்களித்தபடி அவர்களுக்கு சுதந்திரத்தை அளிக்க வேண்டும் என்று உணர்ச்சிவயப்பட்டு பேசினார். அவர் சொன்னபடியே கெடுபிடிகளை தளர்த்தவும் செய்தார். இத்தனை ஆண்டு காலமாக கெடுபிடியின்கீழ் இருந்த சோவியத் மக்களுக்கு சுதந்திரம் பெற இதுவொரு நல்ல அவகாசம் கிடைத்ததுபோல் மனதில்பட்டது. அதனால் கட்டுகடங்காத உற்சாகம் மனதில் எழுந்து கம்யூனிச ஆட்சியின் எல்லா கெடுபிடிகளையும் தளர்த்தச் சொல்லி பெரிய போராட்டம் நடத்தின. இதனை சற்றும் எதிர்பாராத சோவியத் அரசு நிலைகுலைந்து போனது. பொதுவாக உள்நாட்டில் புரட்சி இருந்தால், அரசு ராணுவத்தின் உதவியுடன்தான் கலவரத்தை அடக்கும். ஆனால் இம்முறை ராணுவம் ஆர்வம் கட்டவில்லை. ராணுவமே உதவிக்கு வராதபோது நாட்டை கம்யூனிச ஆட்சியில் வைக்க முடியாது என்று முடிவு செய்து கோர்பசேவ் அவர்கள் பதவியை ராஜினாமா செய்து சோவியத்யூனியனையே கலைத்துவிட்டார். பொய்யான கெடுபிடிகள் 20 ஆண்டுகள் நீடித்தன. இறுதியில் அப்படிப்பட்ட கேடுபிடிகளே வேண்டாம் என்று மக்களுக்கு விழிப்புணர்வு வந்தபோது மூன்றே வருடங்கள் எல்லாவற்றையும் கலைத்து சுதந்திரமான ஜனநாயக நாடாக தன் நாட்டை மாற்றினார். ஆகவே மகாகவி பாரதி பாஞ்சாலி சபதத்தில் கூறியதுபோல் "தர்மத்தின் வாழ்வுதன்னை சூது கவ்வும். ஆனால் இறுதியில் தர்மமே வெல்லும்" என்ற அர்ஜுனனின் வாக்கிற்கேற்ப கம்யூனிசத்தால் விளைந்த பொய்யான சர்வாதிகாரத்திலிருந்து சோவியத் யூனியன் விடுபட்டு உண்மையின் பக்கம் வந்து சேர்ந்தது.

மூலம் : ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவாற்றியவர் : திரு. N. அசோகன்
சொற்பொழிவாற்றிய தேதி : 15.08.2016

.&&&&&&&&&